தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 5, திங்கட்கிழமை.

சித்திரை 22, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு."

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கோவை மாநகரில் வளர்ச்சிப் பணிகள்.

646—(* வினா எண் 6641) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான இடங்களை கையகப்படுத்த மாநகராட்சி செயற்குறிப்பு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) கோவை மாநகரத்தின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக, தனியார் நிலங்களைக் கையகப்படுத்த மேற்கொண்ட 30 செயற்குறிப்புகளில், ஐந்து செயற்குறிப்புகளுக்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை மாவட்ட

வருவாய் அலுவலரின் ஆய்வில் உள்ளன. இவற்றில் பெரும் பாலானவை, பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதற்கும், சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் அகலப்படுத்துவதற்கும் தேவை யான நிலங்களாகும். அரசுக்குச் சொந்தமான இடங்களை உரிமை மாற்றம் செய்ய 5 செயற்குறிப்புகள் கோவை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற கோவை நகரத்தில் அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமான பொது காரியங்களுக்காக புதியதாக அமைக் கப்படுகின்ற லே-அவுட்டுகளில் போதிய இடம் ஒதுக்கவில்லை. சிறிய இடத்தில் லே-அவுட்டுகளில் 5 சென்ட் 10 சென்ட் மட்டுமே ரிசர்வ் சென்டாக வைத்துவிட்டு மீதியை விற்று விடுகிறார்கள். வளர்ந்து வருகின்ற பகுதியில், மாநகராட்சி ஒரு குறிப்பிட்ட பகுதியை பொது காரியங்களுக்கு பயன்படுத்துகின்ற வகையில் ஒதுக்கித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஐந்து இடங்கள் எங்கெங்கு தேர்வு செய்யப்பட்டிருக் கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, இப்போது ஐந்து இடங்கள் எந்தெந்த இடங்கள் என்ற விவரம் இல்லை. அந்த ஐந்து நிலங்களை நில மாற்றம் செய்ய மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனியார் நிலங்களை சட்டப்படி எவ்வளவு ஒதுக்க முடியுமோ அவ்வளவு ஒதுக்கித்தான் தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதன்படி ஒதுக்குகிறோம்.

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோதுமை வழங்கல்.

.647—(* வினா எண் 8455) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசு கோதுமை வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?